செ.வெ.எண்: 393 9/7/2012

## பத்திரிக்கைச் செய்தி

சமூகநலத்துறை திட்டங்கள் குறித்து மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி.பா.வளர்மதி அவர்களின் தலைமையில் அனைத்து மாவட்ட சமூகநல அலுவலர்கள் மற்றும் தொழிற் கூட்டுறவு அலுவலர்களின் ஆய்வுக்கூட்டம் 09.07.2012 அன்று காலை 11.00 மணியளவில் தலைமைச் செயலக கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி செயற்படுத்தப்பட்டுவரும் பள்ளி மாணவ / மாணவியருக்கு நான்கு இணை இலவச சீருடைகள் தைத்து வழங்கும் திட்டம், திருமண உதவித் திட்டங்களின்கீழ் திருமாங்கல்யத்திற்கு தங்கம் வழங்கும் திட்டம், அரசு குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் அரசு சேவை இல்ல மாணவியருக்கான உயர்கல்வி திட்டம், திருநங்கைகளின் சுய உதவிக்குழுக்களுக்கு வருமானம் ஈட்டும் தொழில்களுக்கான கடனுதவி வழங்கும் திட்டம், திருநங்கைகளுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம், இலவசத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டம், முதலமைச்சரின் பெண்குழந்தை பாதுகாப்புத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்களால் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டங்களை சிறப்புற செயல்படுத்த மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் திரு அசோக் டோங்கரே, இ.ஆ.ப., அரசு முதன்மைச் செயலாளர், சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, முனைவர் பூ.முத்துவீரன், இ.ஆ.ப., சமூகநலத் துறை இயக்குநர்(பொறுப்பு) மற்றும் இத்துறையினை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
சென்னை-9